நுகர்ச்சியாளர்களுடைய நன்மைகருதி அரசு எடுத்துக்கொண்ட கவனம் சில சமயங்களில் சூழ்நிலைக்கேற்ற முடிவுகள் எடுக்கப்பட்டதோடு, உள்நாட்டு உற்பத்திகளைப் பொறுத்தமட்டில் ஏற்படும் நீண்டகால பாதிப்புக்களைப்பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. உதாரணமாக அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு மிகவும் குறைந்த விலையில் கோழி இறைச்சி விற்பனை செய்யப்பட்டமை, உள்நாட்டு கோழிப்பண்ணைக் கைத்தொழிலைப் பொறுத்தமட்டில் நிலையற்ற தன்மையை உருவாக்கிசந்தை ஊக்குவித்ததற்காரணிகளையும் குழப்பியது. இத்தகைய சடுதியான முடிவுகள் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் நீண்டகால முதலீட்டுத்தீர்மானங்களைப் பொறுத்தவரை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

விலைகளை உறுதிப்படுத்துவதற்காகவும், ஒழுங்கான நிரம்பலை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் மிளகாய். தீப்பெட்டி, பாலுணவுகள், உலர்ந்த புளிப்புச் சத்து, கொத்துமல்லி, மீன் போன்ற பல பொருட்களைப் பொறுத்தவரையில் தாங்கிருப்புத் திட்டம் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருந்தது மேலும் சில பொருட்களைப் பொறுத்தவரையிலும் இத்திட்டங்கள் நல்ல முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை, உதாரணமாக உலர்ந்த புளிப்புச்சத்தை இருப்பில் வைக்கும் திட்டம் விற்பனை செய்யப்படாத இருப்புக்கள் களஞ்சியங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தலில் முடிவுற்றது. செத்தல்மிளகாயைப் பொறுத்தவரையில் இரு பிரதான நிறுவனங்களான கூ. மொ. வி.க்கும், சந்தைப்படுத்தல் திணைக்களத்திற்கும் இடையே சரியான இணைப்பு இருக்கவில்லை,

அரசின் வர்த்தகக் கொள்கைக்கு தாராளமாக்கப்பட்ட கொள்கை அமைப்புக்கேற்ப ஏற்ற பொருத்தமான மாற்றங்களை விரைவில் கொண்டு வருவது மிகவும் வேண்டியதொன்றாகும். வர்த்தகத்தில் இத்துறை பெருமளவில் ஈடுபட வேண்டுமாயின் இம்மாற்றங்கள் அரசதுறை வர்த்தகத்தில் பெரும் போட்டியையும் திறமையையும் கொண்டுவரவேண்டும். உள்ளூர் உற்பத்தியாளர்கட்கு நீண்டகால தீர்வைக் கொள்கை மூலம் மேலதிக பாதுகாப்பும் ஊக்குவித்தல்களும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அடிக்கடி தீர்வைகளில் மாற்றங்கள் செய்வது நிலையற்ற தன்மையை உருவாக்குவதுடன் நீண்டகால வர்த்தக முடிவுகளை எடுப்பதில் இக்கட்டான நிலையினை ஏற்படுத்தியது. பொருட்களின் விலைகள் நிர்ணயிப்பதில் அரச வர்த்தக நிறுவனங்கள் தயாரிப்பாளர்களின் ஊக்குவித்தற் காரணிகட்கு கூடிய முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் தாங்கிருப்பு நிதித் திட்டத்தின்கீழ் நிர்வாசம் மிகவும் கவனமாக செயல்படவேண்டும். அதாவது முக்கியமாக உள்நாட்டு உற்பத்திகளான துணை உணவுப்பொருட்களான செத்தல் மிளகாய், வெங்காயம் உருளைக்கிழங்கு என்பவற்றின் அளவுக்கு மீறிய இருப்புக்களைச் சேகரிப்பதைத் தவிர்க்கவும் சந்தைக்கு அளவுக்குமீறி பொருட்களை வழங்காமல் இருக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## சென்மதி நிலுவை[1]

1979 ஆம் ஆண்டின் சென்மதி நிலுவை நடவடிக்கைகள், பெரும்பாலும் 1977ஆம் ஆண்டின் பொருளாதார சீர்திருத்தங்களின் விளைவுகளாகும். இறக்கு

1. சென்மதி நிலுவைகளில் உபயோகிக்கப்பட்ட வர்த்தகத்தரவு இந்த ஆண்டுப்பகுதியின் உண்மைப்பெறுகைக் கொடுப்பனவுகள் ஆகும். இவை முன்னர் கொடுக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகத்தரவுகளிலிருந்து வேறுபடும். இவை ஏற்றுமதிகள் இறக்குமதிகளின் இயல்பான அசைவுகளைப் பிரதிபலிக்கின்றன. இவ்வேறுபாடுகள் ஒரு பக்கத்தில் பெறுகை, கொடுப்பனவு இரண்டுக்கும் இடையேயுள்ள இடைவெளி காரணமாகவும் மறுபக்கத்தில் பொருட்களின் இயல்பான அசைவுகள் காரணமாகவும் ஆகும்.

மதிகள் உள்நாட்டு உற்பத்தித்திறனை உயர்த்தும் நோக்கத்துடன் தாராளமாக்கப்பட்டது. இதன்மூலம் நீண்டகாலத்தில் ஏற்றுமதி மூலமான பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக இறக்குமதிகட்கு ஏற்பட்ட உடனடிக்கேள்வி அதிகரிப்பின் விளைவும் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட மிக உயர்ந்த அதிகரிப்பும் சேர்ந்து வர்த்தகக் குறையினை 1978 ஆம் ஆண்டின் ரூ. 23,930 லட்சத்திலிருந்து (சி. எ. உ. 1 440 இலட்சம்) 1979 இல் ரூ. 72,880 இலட்சமாக (சி. எ. உ. 3,620 இலட்சம்) இரட்டித்துக் காணப்பட்டது இப்பெரிய வர்த்தகக் குறை நிலை சென்மதி நிலுவையின் நிலையினை நிர்ணயிக்கும் அடிப்படைக்காரணியாக அமைந்தது

1979 ஆம் ஆண்டில் பணிக்கணக்கு மிகையிலும் தேறிய வெளிநாட்டு மாற்றல்களிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஏற்பட்டபோதும், உயர்ந்த வர்த்தக்குறை ஒருபோதும் காணப்படாத அளவிலான ரூ 35,560 இலட்சம்கொண்ட (சி. எ. உ. 1,770 இலட்சங்கள்) நடைமுறைக் கணக்குக் குறையினை ஏற்படுத்தியது. இருப்பினும், பன்நாட்டு நாணயநிதிய (ப. நா. நி.) எடுப்பனவுகள், சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் (சி. எ. உ.) ஒதுக்கீடுகள் போன்றவை மூலம் கிடைத்த பெருமளவிலான நீண்டகால முதலீடுகள் இலங்கைக்குக் குறையினை நிரப்ப உதவியதோடு ரூ. 7,930 இலட்சம் கொண்ட (சி. எ. உ 350 இலட்சம்) ஒரு சிறு மிகையினையும் ஏற்படுத்த உதவின. இது மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களில் 28 சத வீதங்கொண்ட அதிகரிப்பினைக்காட்டி ரூ. 96,520 இலட்சமாக ஆண்டின் இறுதியில் (சி. எ. உ. 4 750 இலட்சம்) விளங்கியது 1980 ஆம் ஆண்டின் முதல் 3½ மாதங்களிற்கு திட்டமிடப்பட்ட இறக்குமதிகட்கு நிதியிடுதற்கு போதியதாக இருந்தது.

1979 ஆம் ஆண்டின் இறக்குமதிக் கொடுப்பனவுகளினை முன்னைய ஆண்டின் 30 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 37 சத வீதமாக வெகுவாக அதிகரித்து ரூ. 225100 இலட்சமாக (சி. எ. உ. 11,210 இலட்சம்) காணப்பட்டது. 1978 ஆம் ஆண்டினைப்போலவே இறக்குமதிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு நுகர்வு பொருட்களோடு ஒப்பிடுகையில் இடைநிலை, முதலீட்டுப் பொருட்களைப் பொறுத்த வரையிலேயே முக்கியமாகக் காணப்பட்டன. இறக்குமதிகளைப் பொறுத்தவரையிலான இத்தகைய முதலீட்டு, இடைநிலைப் பொருட்களுக்கான இறக்குமதிக் கேள்விகள் எதிர்காலத்திலும் உயரும் என எதிர்பார்க்கலாம். எனவே அபிவிருத்தி முயற்சிகளை எதிர்காலத்தில் கொண்டு நடாத்துவதற்கு ஏற்றுமதியில் உயர்ந்த விரிவு இன்றியமையாததாகும்,

சி. எ. உ. நியதிகளின்படி ஏற்றுமதி வருவாய்கள் 1978 ஆம் ஆண்டில் ரூ 132,070 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 6,750 இலட்சம்) 12சத வீதத்தினால் 1979 ஆம் ஆண்டில் ரூ. 152,820 இலட்சமாக (சி. எ. உ. 7,590 இலட்சம்) அதிகரித்தது. இந்த மெதுவான வளர்ச்சிக்கு ஏற்றுமதிப் பயிர்களின் குறைந்த செயலாற்றமே காரணமாகும். எனினும் மரபுவழியற்ற ஏற்றுமதிப் பொருட்களான உடுப்புக்கள், புடவை பெற்றோலிய உற்பத்திகள் என்பவற்றில் அதிகரித்த போக்கு காணப்பட்டது. ஆனல் இவ்வுற்பத்திகள் கூடியளவு இறக்குமதி உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பதால் இவற்றின் தேறிய செலாவணி வருவாய் குறைவாக இருக்கின்றது. எனவே இலங்கை இன்னும் சில காலத்திற்கு செலாவணியை ஈட்ட, மரபுவழி ஏற்றுமதிப் பயிர்களிலேயே தங்கியிருக்க வேண்டியுளளது.

## அட்டவணை 1.21

## சென்மதி நிலுவை — பகுப்பாய்வு வெளிப்படுத்துகை 1975 — 1979

| விடயங்கள் | 1975 | 1976 | 1977 | 1978 | 1979* | 1975 | 1976 | 1977 | 1978 | 1979* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பத்து இலட்சங்களில் | | | | |
| **பொருட்களும் பணிகளும்** | | | | | | | | | | |
| 1. வணிகப் பொருட்கள் ... | -1,421 | - 709 | + 350 | - 2,393 | - 7,288 | - 168 | - 73 | + 29 | -144 | - 362 |
| ஏற்றுமதிகள் (க.எ.பெ.) ... | 3,913 | 4,707 | 6,640 | 13,207 | 15,282 | 464 | 484 | 651 | 675 | 759 |
| இறக்குமதிகள் (கொ.க.க.) ... | -5,334 | -5,416 | -6,290 | -15,600 | - 22,570 | - 632 | - 557 | - 622 | -819 | -1,121 |
| 2. பணிகள் ... | + 89 | + 112 | + 304 | + 119 | + 739 | + 11 | + 12 | + 29 | + 6 | +37 |
| பெறுகைகள் ... | 565 | 643 | 923 | 1,942 | 2,992 | 67 | 66 | 89 | 99 | 149 |
| கொடுப்பனவுகள் .. | 476 | 531 | 619 | 1,823 | 2,253 | 56 | 54 | 60 | 93 | 112 |
| 3. பொருட்களும் பணிகளும் ( 1 + 2 ) ... | -1,332 | - 597 | + 654 | - 2,274 | - 6,548 | - 157 | - 61 | + 58 | -138 | - 325 |
| 4. மாற்றல்கள் ... | 560 | 547 | 612 | 1,242 | 2.993 | 66 | 56 | 59 | 63 | 148 |
| தனியார் ... | 19 | 56 | 122 | 342 | 754 | 2 | 6 | 12 | 17 | 37 |
| அலுவல் சார்ந்த ... | 541 | 491 | 490 | 900 | 2,239 | 64 | 50 | 47 | 46 | 111 |
| 5. நடைமுறைக் கணக்கு மிகுதி ... | - 772 | - 50 | +1,266 | - 1,032 | - 3,556 | - 91 | - 5 | + 117 | - 75 | -177 |
| 6. நாணயமல்லா மூலதனம் ... | 404 | 591 | 326 | 2,600 | 3,306 | 48 | 61 | 32 | 133 | 164 |
| தனியார் துறை ... | - 32 | - 109 | - 127 | 145 | 874 | - 4 | - 11 | - 12 | 8 | 43 |
| அரச துறை ... | 436 | 700 | 453 | 2,455 | 2,432 | 52 | 72 | 44 | 125 | 121 |
| நீண்ட கால (தேறிய) .. | - 560 | 659 | 602 | 2,609 | 2,432 | 67 | 68 | 58 | 133 | 121 |
| பெறுகைகள் . | (1,254) | (1,244) | (1,319) | (3,680) | (3,351) | (149) | (128) | (127) | (188) | (167) |
| கடன் தீர்ப்பனவுகள் ... | (-694) | (- 585) | (-717) | (-1,071) | (-919) | (- 82) | (- 60) | (- 69) | (- 55) | (-46) |
| குறுகிய கால (தேறிய) ... | -124 | 41 | - 149 | - 124 | — | 15 | - 4 | - 14 | - 8 | — |
| 7. பெறுமதி சீராக்கங்கள் ... | — | — | 1,680 | 344 | - 18 | — | — | — | — | — |
| 8. பிழைகளும் தவிர்ப்புக்களும் ... | - 32 | - 10 | + 41 | - 50 | + 820 | - 8 | - 7 | 4 | 7 | 36 |
| 9. சி.எ.உ. ஒதுக்கீடு ... | — | — | — | — | 241 | — | — | — | — | 12 |
| 10. திரண்ட நிலுவை ... | - 400 | 531 | 3,313 | 1,861 | 793 | - 51 | 49 | 153 | 65 | 35 |
| 11. நாணய அசைவுகள் ( — மிகை ) ... | +400 | - 531 | -3,313 | - 1,861 | - 793 | 51 | - 49 | - 153 | - 65 | - 35 |
| மாற்றல்வீதம் இலங்கை ரூபா சி.எ.உ. (ஆண்டுச் சராசரி) | | | | | | 8.44 | 9.73 | 10.42 | 19.58 | 20.13 |


மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: 1. முன்னைய அறிக்கைகளில் இடம்பெற்ற சென்மதிநிலுவை அட்டவணை இப்பகுப்பாய்வு அட்டவணையின் மூலம் அகற்றப்படுகின்றதுடன் இது 1975 இன் இருந்தான காலப்பகுதியை உள்ளடக்குகிறது,

2, அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்குமான மாற்றல் வீதங்கள் "இம்மட்டத்திக்கும்மல்" ஆண்டுச்சராசரி வீதத்தின் மாற்றப்பட்டன. நாணய அசைவுகள் காலமுடிவில் உள்ள வீதங்களில் மாற்றப்பட்டன. 1977 இல் இருந்தும் பணித்துறை, நாணயமல்லாத்துறை கொடுக்கல் வாங்கல்களின் அனைத்து மாற்றல்களும் நான்கு காலாண்டுகளுக்கான மாற்றல் தொகையைப் பிரதிபலிப்பதுடன் ஆண்டுச் சராசரி வீதங்களின் மாற்றங்களுடன் ஒத்துப் போகவும் இல்லை.

## சென்மதி நிலுவை

ஆண்டுதோறும்





பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வெளிநாட்டுச் சொத்துக்கள்

காலாண்டுகள்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

முன்னைய ஆண்டின் செயலாற்றத்திற்குமாறாக பணிகள் கணக்கில் 1978 ஆம் ஆண்டின் ரூ. 1,190 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 60 இலட்சம்) 1979 இல் ரூ. 7,390 இலட்சமாக (சி. எ. உ. 370 இலட்சம்) அதிகரித்தது. இக்கணக்கில் மேலே காணப்பட்டதுபோல, அண்மை ஆண்டுகளில் சுற்றுலாத் தொழில் இம்மிகைக்கு முக்கியமான காரணியாக அமைந்தது. சுற்றுலாத் தொழில் மூலமான மொத்த வருவாய் 1978ஆம் ஆண்டில் ரூ. 7,500 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 380 இலட்சம்) 1979இல் 40 சத வீதத்தால் ரூ. 10,530 (சி. எ. உ.) 530 இலட்சம்) அதிகரித்தது. ஓரளவுக்கு பயணத்தர் எண்ணிக்கையில் ஏற்பட்ட 30 சதவீத அதிகரிப்பும் இதற்குக் காரணமாக அமைந்தது. வெளிநாட்டுப்பயணங்கள் மீதான கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 4,580 இலட்சமாக (சி. எ. உ. 230 இலட்சம்) சிறிதளவில் அதிகரித்தது. வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி வருவாய்களிலும், துறைமுகச் சேவை மூலமான வருவாய்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பும், பணிகள் கணக்கில் ஏற்பட்ட மிகைக்கு காரணமாக அமைந்தன. வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்போடு வெளிநாட்டுப் பணச்சந்தைகளில் அத்தகைய சொத்துக்களின் முதலீடு செய்து பெறப்பட்ட வட்டி உழைப்புக்கள் 1978 ஆம் ஆண்டின் ரூ. 3,140 இலட்சத் (சி. எ உ. 160 இலட்சம்) திலிருந்து 1979 ஆம் ஆண்டின் ரூ. 6,140 இலட்சமாக (சி.எ.உ. 300 இலட்சம்) இருமடங்கால் அதிகரித்தது. மறுபக்கத்தில் வெளிநாட்டுக் கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ 4,580 இலட்சத்தில் இருந்து (சி. எ. உ. 250 இலட்சம்) ரூ. 7,560 இலட்சமாக (சி எ. உ. 370 இலட்சம்) அல்லது 48 சத வீதத்தால் உயர்வடைந்தது.

1979இல் இன்னுமொரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் இலங்கைக்கான தேறிய மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பாகும் இம்மாற்றங்களின் தொகை 1978 ஆம் ஆண்டில் ரூ. 12 420 இலட்சத்திலிருந்து (சி. எ. உ 630 இலட்சம்) 1979 இல் ரூ. 29,930 இலட்சமாக (சி.எ.உ. 1, 480 இலட்சம்) இருமடங்காக்கியது. இதற்கு அரச, தனியார் துறைமாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்புகாரணமாகும். தனியார் மாற்றல்களில் பெரும்பகுதி வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கையர்களால் அனுப்பப்பட்ட பண உள்வருகைகளை உள்ளடக்கியிருந்தது. இத்தகைய மாற்றல்கள் முன்னைய ஆண்டின் ரூ 6,100 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 310 இலட்சம்) 48 சத வீதத்தால் ரூ. 9,350 இலட்சமாக (சி. எ. உ. 460 இலட்சம்) அதிகரித்தது. இவ் உள்வருகைகளில் 70 சதவீதமானளவில் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்களால் அனுப்பப்பட்டவை என மதிப்பிடப்பட்டுள்ளது. அரச மாற்றல்கள் பெரும்பாலும் வெளிநாட்டு அரசுகளிடமிருந்தும், பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்ட செயற்றிட்ட பண்ட, கொடை வழங்கல்களை உள்ளடக்கி இருந்தது, இது 1978 ஆம் ஆண்டின் ரூ. 9 000 இலட்சத்திலிருந்து (சி எ. உ. 460 இலட்சம்) 1979 இல் ரூ. 22,390 இலட்சமாக (சி எ. உ. 1,110 இலட்சம்) இரண்டு மடங்காக காணப்பட்டது.

வெளிநாட்டு மூலவளம் பயன்பாடு அட்டவணை 1.22 இல் தரப்பட்டுள்ளது. சி. எ. உ. நியதியில் மொத்த வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் (பயன்பாடுகள்) 28 சத வீதத்தால் அதிகரித்தவிடத்து வெளிநாட்டு வருவாய்கள் (மூலங்கள்) 18 சத வீதத்தால் மட்டும் அதிகரித்தன. இதனால் 1978 ஆம் ஆண்டின் ரூ. 40,480 இலட்சம் கொண்ட (சி. எ. உ. 2.300 இலட்சம்) வெளிநாட்டு மூலவள இடைவெளியினை 1979 ஆம் ஆண்டில் ரூ. 7,540 இலட்சம் (சி.எ.உ. 3,706

## அட்டவணை 1.22
## வெளிநாட்டு மூலவளங்களின் இடைவெளியை நிதியீட்டல் 1977–1979

| வகைகள் | ரூபா பத்து இலட்சம் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 | 1977 | 1978 | 1979 |
| **1. வெளிநாட்டு வருவாய்கள் ...** | **7,753** | **15,749** | **19,210** | **758** | **805** | **954** |
| 1.1. ஏற்றுமதிகள் ... | 6,640 | 13,207 | 15,282 | 651 | 675 | 759 |
| 1.2. பணிகள் ... | 923 | 1,942 | 2,993 | 99 | 99 | 149 |
| 1.3. தனியார் மாற்றல்கள் ... | 190 | 610 | 935 | 18 | 31 | 46 |
| **2. வெளிநாட்டு கொடுப்பனவுகள் ..** | **8,613** | **19,807** | **26,764** | **845** | **1,035** | **1,330** |
| 2.1. இறக்குமதிகள் ... | 6,290 | 15,600 | 22,570 | 622 | 819 | 1,121 |
| 2.2. பணிகள் ... | 620 | 1,823 | 2,253 | 60 | 93 | 112 |
| 2.3. தனியார் மாற்றல்கள் .. | 67 | 268 | 181 | 6 | 14 | 9 |
| 2.4. மூலதன மீளக்கொடுப்பனவுகள் | 1,636 | 2,116 | 1,760 | 157 | 109 | 88 |
| 3. வெளிநாட்டு மூலவள இடைவெளி ... | – 860 | – 4,048 | – 7,554 | –87 | – 230 | – 376 |
| 4. மூலவள இடைவெளியினை நிதியீட்டல் | + 860 | +4,048 | +7,554 | + 87 | + 230 | + 376 |
| 4.1. நீண்டகால கடன்கள் (அ) ... | 1,184 | 3,680 | 2,903 | 114 | 188 | 144 |
| 4.2. நன்கொடைகள் ... | 490 | 900 | 2,239 | 47 | 46 | 111 |
| 4.3. நிரம்பலர் கொடுகடன் . | 135 | 8 | 609 | 13 | — | 31 |
| 4.4. குறுகியகால கொடுகடன் ... | 225 | 114 | 41 | 22 | 6 | 2 |
| 4.5. வங்கிக் கடன்கள் ... | 222 | — | — | — | — | — |
| 4.6. இருபுடை நிலுவைகள் ... | — | — | 413 | — | — | 20 |
| 4.7. ப.நா.நி. எடுப்பனவுகள் . | 935 | 756 | 1,592 | 55 | 38 | 80 |
| 4.8. நேரடி முதலீடு . | 4 | 23 | 769 | — | 1 | 38 |
| 4.9. வெளிநாட்டுச் சொத்துக்கள் .. | -4,171 | – 1,904 | – 2,175 | – 169 | – 65 | – 104 |
| 4.10. சி.எ.உ. ஒதுக்கீடு ... | — | — | 241 | — | — | 12 |
| 4.11. ஏனைய ... | 115 | 177 | 120 | 11 | 9 | 6 |
| 5. பெறுமதியிடலும் சீராக்கமும்(ஆ) ... | 1,680 | 344 | – 18 | — | — | — |
| 6. பிழைகளும் தவிர்ப்புக்களும் .. | + 41 | – 50 | + 820 | – 6 | + 7 | + 36 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி


(அ) செயற்திட்ட உதவி, பண்ட உதவி, நம்பிக்கை நிதி எடுப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

(ஆ) செலாவணி வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து மதிப்பிடப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரித்த பெறுமதி.

UNIVERSITY OF MORATUWA LIBRARY

## செலாவணி வீதங்கள்

1977 நவம்பர் 16 முதல் மொத்த சதவீத மாற்றங்கள்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இலட்சம்) விரிவடையச் செய்தது. முன்னரே குறிப்பிட்டதுபோல இறக்குமதிகளின் உயர்ந்த மட்டக் கொடுப்பனவுகளே விரிவடையும் மூலவள இடைவெளிக்குரிய பிரதான காரணமாக அமைந்தன. மூலதனமீளக்கொடுப்பனவுகள் 1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் மொத்தக் கொடுப்பனவுகளில் பெரும்பங்கினை வகித்தன. 1979 ஆம் ஆண்டில் மேலும் இது வீழ்ச்சியடைந்தது. இது கடந்த சில ஆண்டுப்பகுதியில் வெளிநாட்டு மூலவள இடைவெளியினை நிதியீட்டுவதில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியமையின் விளைவாகும்.

1977 ஆம் ஆண்டு தொடக்கம் உடனடியான கொடைகள், நீண்டகால அரச கடன்பாடுகள், தனியார் நேரடி முதலீடுகள், ப. நா. நிநியத்திடமிருந்தான எடுப்பனவுகள் என்பவையே, குறுங்காலக் கொடுகடன்கள் வங்கிக் கடன்பாடுகள் என்பவற்றைவிட மூலவள இடைவெளியினை நிதியீட்டலில் முக்கியம் வாய்ந்தவையாக விளங்கின. நீண்டகாலக் கடன்பாடுகள் பண்ட உதவி ரூ. 14,640 இலட்சம் (சி. எ உ 720 இலட்சம்) செயற்திட்ட உதவி ரூ. 8,400 இலட்சம் (சி. எ. உ. 420 இலட்சம், ரூ. 5,990 இலட்சம் கொண்ட ப. நா. நி. (சி. எ. உ. 300 இலட்சம்) யின் பொறுப்பான்மை நிதியித்திலிருந்து பெறப்பட்ட கடன் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. 1978 ஆம் ஆண்டில் ரூ. 36,800 இலட்சமாக (சி. எ. உ. 1,880 இலட்சம்) விளங்கிய நீண்டகால அரச கடன்பாடுகள் 1979 ஆம் ஆண்டில் ரூ. 29,030 இலட்சமாக (சி. எ. உ. 1,440 இலட்சம்) வீழ்ச்சியடைந்தபோதும் இவ்வீழ்ச்சி கணிசமான அளவு கொடை வழங்கீடுகளால் கூடுதலாக எதிரீடு செய்யப்பட்டன. இவ்வாறாக வெளிநாட்டு மூலவள இடைவெளியினை நிதியீட்டுவதில் உடனடிக் கொடைகளின் முக்கியத்துவம் பெருமளவில் அதிகரித்தது. இவை ரூ. 11,670 இலட்சம் கொண்ட (சி. எ. உ. 580 இலட்சம்) பண்டக்கொடைகளையும். ரூ. 9,980 இலட்சம் (சி. எ. உ. 490 இலட்சம்) கொண்ட செயற்றிட்டக்கொடைகளையும் ரூ. 740 இலட்சம் கொண்ட (சி. எ. உ. 40 இலட்சம்) ப. நா. நி. திட்டத்தின் கீழான தங்க விற்பனைத் திட்டத்தின் இலாபங்களைப் பிரிப்பதன்மூலம் கிடைத்த தொகையையும் உள்ளடக்கி இருந்தது. 1978 ஆம் ஆண்டில் பெரும் வீழ்ச்சியைக்காட்டிய நிரம்பலர் கொடுகடன் 1979 ஆம் ஆண்டில் ரூ. 6,090 இலட்சமாக (சி.எ.உ. 310) இலட்சம்) குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்தது.

நாணயமல்லா மூலதன அளவுகளைப் பொறுத்தவரையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் தனியார் வெளிநாட்டு முதலீடுகள் தேறிய உட்பாய்ச்சலில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு காணப்பட்டமையாகும். பெருமளவு கொ. பெ. பொ. ஆ. வினது கைத்தொழில் அபிவிருத்தி வலயத்தில் முதலீடுகளாகும். தனியாரின் நேரடி முதலீடுகள் 1978 ஆம் ஆண்டின் ரூ 230 இலட்சத்தில் இருந்து (சி. எ. உ. 10 இலட்சம்) 1979 ஆம் ஆண்டில் ரூ. 7,690 இலட்சமாக (சி. எ. உ. 380 இலட்சம் உயர்வடைந்தது

1977 ஆண்டு தொடக்கம் ப, நா. நி. எடுப்பனவுகளும் பெருமளவில் அதிகரித்துக் காணப்பட்டன. ப. நா. நி. 1979 ஆம் ஆண்டில் ரூ. 15,920 இலட்சம் (சி எ. உ. 800 இலட்சம்) கொண்ட தொகையினை விரிவுபடுத்தப்பட்ட நிதி வசதிகளின்கீழ் (வி. நி. வ.) இரண்டு சமமான தவணை முறையில் வழங்கியது. 1979 சனவரியில் வி. நி. வ இலங்கைக்கு அனுமதிக்கப்பட்டது பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியான சீராக்கங்களை மேற்கொள்ள தேவையான இடைக்கால சென்மதி நிலுவை உதவிகளை அளிக்கும் நோக்கங்களுக்காக இலங்கையின் முழுமையான பொருளாதார கொள்கைகள்மீது தொடர்ந்து

நடாத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள், உடன்பாட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1979 ஆம் ஆண்டில் இருந்து மூன்று ஆண்டுகள் காலத்துக்கு சி. எ. உ. 2,603 இலட்சம் (ரூ. 52,060) இலட்சம்) பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இது இலங்கையின் பொருளாதாரக் கொள்கை அமைப்போடு ஒத்துப்போகும் வகையில் இருக்கக்கூடியதான பொருளாதார அமைப்பு மாற்றங்களுக்குத் தேவையான இடைக்கால சென்மதி நிலுவை உதவிகளை வழங்கும் நோக்கத்துக்காக ஒழுங்கு செய்யப்பட்டது இதைவிட 1979 சனவரியில் ப.நா நி 124 இலட்சம் கொண்ட (ரூ. 2,410 இலட்சம்) அளவில் சிறப்பு எடுப்பனவு உரிமைகளை (சி. எ. உ ) ஒதுக்கீடு செய்தது. இதுவே 1978 திசெம்பரில் ப. நா. நி. மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்கீழ் செய்யப்பட்ட முதலாவது சி. எ உ. ஒதுக்கீடாகும். இதன்படி ப. நா. நி. யின் சி. எ. உ. திணைக்களத்தில் பங்குபெறும் எல்லோருக்கும் சி எ. உ. 40,000 இலட்சம், 1979, 1980, 1981 ஆகிய ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு மொத்தமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

மூலதனக்கணக்கில் நீண்டகால அலுவல்சார் கடன்பாடுகள், ப நா. நி. இலிருந்தான எடுப்பனவுகள், தனியாரின் நேரடி முதலீடுகள், சி.எ.உ. ஒதுக்கீடுகள் என்பவை ஓர் மிகையினை உருவாக்கின. இம்மிகை நடைமுறைக்கணக்கு குறையினையும், வெளிநாட்டு மூலவள இடைவெளியையும் நிதியீட்டப் போதியதாக இருந்தது. எனவே மேலதிக மூலவளங்கள் வெளிநாட்டு சொத்துக்களோடு சேர்க்கப்பட்டன.

கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள், பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் நாட்டின் கடன்பெறும் ஆற்றலை பலப்படுத்தியது. யூன்மாதத்தில் அரசு 8 ஆண்டு ஐ. அ. டொலர் 500 இலட்சம் (ரூ. 7810 இலட்சம்) கடன் ஒன்றை முதல் நான்கு ஆண்டுகளில் இ. வ. அ. வீ. (இலண்டன் வங்கிகளுக்கிடையே அளிக்கும் வீதம்) ஆண்டொன்றுக்கு ஒரு சத வீதத்தின் 7/8 ஆகவும் அதன் பின்னர் மேலாக 1 சதவீதம் என்னும் கவர்ச்சியான வீத நியதிகளில் ஒப்பந்தம் செய்து கொண்டது. எனினும் நாட்டின் சொத்துக்களின் நிலை பலமானதாய் காணப்பட்டமையால் இக்கடன் 1979 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படவில்லை.

அண்மை ஆண்டுகளில் வெளிநாட்டு மூலவள இடைவெளியினை நிதியீட்டும் முறைகளில் ஏற்பட்ட மாற்றல்கள் படுகடன் தீர்ப்பனவு விகிதம் (தனது மூலதன மீளக் கொடுப்பனவுகள், வங்கிக்கடன்பாடுகள், பா. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் உட்பட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிகள் என்பவற்றை வர்த்தகப் பொருள் ஏற்றுமதிகள் பணிகள் என்பவற்றின் உழைப்புக்களின் சதவீதமாக 1978 ஆம் ஆண்டின் 15 சதவீதத்திலிருந்து 1979 ஆம் ஆண்டின் 13 சதவீதமாக, வீழ்ச்சியடைய ஓரளவு காரணமாக அமைந்தது. ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்த்து படுகடன் தீர்ப்பனவு விகிதம் 1978 ஆம் ஆண்டின் 12 சதவீதத்தில் இருந்து 1979 இல் 8 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது. உண்மையான படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட கடன்களது முதிர்ச்சி அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக 1978 ஆம் ஆண்டின் ரூ. 18,620 இலட்சத்திலிருந்து (சி எ. உ. 950 இலட்சம்) 16 சத வீதத்தால் குறைவடைந்து 1979 இல் ரூ. 16,200 இலட்சமாக வீழ்ச்சியுற்றது. இப்படுகடன் தீர்ப்பனவுப்பளுவில் ஏற்பட்ட இலகுத்தன்மைக்கு 1979ஆம் ஆண்டில் ஏற்றுமதிகள், பணிகளின் வருவாய் அதிகரிப்பு அண்மைக்

கால கடன்பாடுகள் அதிக சாதகமான நியதிகளில் பெறப்பட்டமையும் ஓரள வுக்குக் காரணமாகும். எடுத்துக்காட்டாக 1979 இல் மொத்தப் பெறுமதியில் 74 சத வீதமான நீண்டகால கடன்களின் 70சத வீதமானவைகள் 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலான சலுகைக் காலத்தைக் கொண்டிருந்தன. வெளிநாட் டுப் படுகடனின் வெளிநின்ற மட்டம் 1978ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 175,060 இலட்சத்தில் இருந்து (சி எ. உ 8650 இலட்சம்) 1979 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 184,470 இலட்சமாக (சி எ. உ. 90,60 இலட்சம்) உயர்வடைந்தது. இதற் குச் செயற்றிட்ட பண்டக்கடன்களின் அதிகரித்த பயன்பாடுகள், வி.நி. வ. பொறுப்பாண்மை நிதியம், என்பவற்றின்கீழ் ப. நா. நி. லிருந்துதான எடுப் பனவுகள் என்பவை காரணமாக அமைந்தன.

இலங்கையின் ரூபா 1977 நவம்பர் 16 தொடக்கம் மிதக்கவிடப்பட்ட செலாவணி விகிதங்களின் கூட்டுமாற்றங்கள் 1979 ஆம் ஆண்டு இறுதியில் ஐ. அ. டொலருக்கு எதிராக 4 சத வீத அதிகரிப்பையும், யப்பானிய யென் னுக் கெதிராக 1 சத வீத அதிகரிப்பொன்றைக் காட்டியது. மறு புறத்தில் ரூபா ஸ்டேர்லிங் பவுணுக்கு எதிராக 16 சத வீதத்தாலும் டியுச் மார்க்கிற்கு எதிராக 21 சத வீதத்தாலும் சி. எ. உ. எதிராக 7 சத வீதத்தாற் வீழ்ச்சியை யும் காட்டியது.

## அரச நிதித் தொழிற்பாடுகள்

வரவு செலவுத்திட்டத்தின் மூலமதிப்பீட்டு மிகையான ரூ. 8,950 இலட்சத் துக்கு மிகவும் முரணான வகையில், 1979ஆம் ஆண்டில் அரசின் அரசிறை, செல வினம் மீதான தற்காலிகத் தரவுகள் ரூ. 2,000 இலட்சம் கொண்ட நடைமுறைக் கணக்கு மிகையினைக் காட்டுகின்றன. நடைமுறைக்கணக்கில் ஏற்பட்ட இப்பா திப்பு பெருமளவிற்கு நடைமுறைச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும், முற் பணக்கணக்குகளின் கீழான கொடுப்பனவுகளை மிகக் குறைவாக மதிப்பீடு செய் ததினாலும் ஏற்பட்டதாகும். கடன்கழிரப்பு நிதியத்துக்கான உதவுதொகைகளை யும் மீளக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய தற்காலிக மூலதனச் செலவுகள் ரூ. 89,910 இலட்சமாக அமைந்தன. நடைமுறைக்கணக்குமிகையானரூ. 2,000 இலட்சத்துடன் பொதுவான வரவு செலவுத்திட்டக்குறை ரூ. 87, 910 இலட்சம் ஆகியது. இது பெருமளவுக்கு ரூ. 45,890 இலட்சம்கொண்ட உள்நாட்டு மூலங் களினாலும் ரூ. 42, 290 இலட்சங்கொண்ட வெளிநாட்டு மூலங்களினாலும் நிதி யிடப்பட்டது. அரச நிதித் தொழிற்பாடுகளினால் ஏற்பட்ட இறுதியான விரிவுத் தாக்கம் ரூ. 6,340 இலட்சமாகும்.

முந்திய ஆண்டின் மொத்தச் செலவான ரூ 188, 530 இலட்சத்துடன் ஒப் பிடுகையில் 1979 ஆம் ஆண்டில் அரசின் மொத்தச் செலவு ரூ.215, 210இலட்சத் சமாக அமைந்து 14 சத வீத அதிகரிப்பைக் காட்டுவது. முற்பணக்கணக்குகளின் கீழான செலவுகளையும் உள்ளடக்கிய நடைமுறைச் செலவு, ரூ. 125, 300இலட்ச மாக அமைய மூலதனச் செலவு, மீதியான ரூ. 89,910 இலட்சத்தைக்கொண் டிருந்தது. முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச்செலவு 2சதவீதத்தி னால் உயர்வடைந்து, மூலதனச் செலவு 36 சத வீதத்தினால் மிகவும் கூடுதலாக உயர்வடைந்தது. எனினும் மொத்த உற்பத்தியில் அரசின் மொத்தச்செலவு விகி தம் 49 சதவீதத்தில் இருந்து 42 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது தேசிய உற் பத்தியில் நடைமுறைச் செலவின் பங்கு 32 சதவீதத்திலிருந்து 25 சத வீதமாக வீழ்ச்சியடைய மூலதனச் செலவின்விகிதம்17 சதவீதத்திலிருந்து 18சதவீதமாக உயர்வடைந்தது. அரசிறை 1978 இன் ரூ. 116, 880 இலட்சத்திலிருந்து 9 சத